REGD. NO: M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 65630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஐப்பசி 17௳ சனி (2—11—57) ★ ☆ வெளியூர்: ஐப்பசி 18௳ ஞாயிறு (3—11—57) [இதழ் 121

மூன்று மாதத்தில் 3,48,081 பேர்!

வடக்கு வட்டார இரயில்வேயில் 1957, ஜூன், ஜூலை, ஆகஸ்ட் ஆகிய 3-மாதக் காலத்தில் டிக்கெட் இல்லாமலோ, அல்லது செல்லுபடியாகாத டிக்கெட்டுகளை வைத்துக்கொண்டோ பிரயாணம் செய்ததாக 3,48,081 பேர்வழிகள் கண்டுபிடிக்கப்பட்டார்கள், 1956-ம் ஆண்டில் இதற்குச் சரியான காலத்தில் இவ்விதம் கண்டுபிடிக்கப்பட்டவர்கள் 3,10,844 ஆகும்; இவர்களிடமிருந்து கட்டணமாகவும், அபராதமாகவும் மொத்தம் ரூ. 6,85,820 வசூலாக்கப்பட்டது. முந்திய ஆண்டில் இதற்குச் சரியான காலத்தில் வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 5,86,739 ஆகும். இதேகாலத்தில் கட்டணம்செலுத்தாமல் கடத்தப்பட்ட 25,138 சாமான்கள் கண்டுபிடிக்கப்பட்ட வகையில் வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 65,059 ஆகும்.

'ஒரு படி பாத்திரத்தில் இரண்டு படி பால் ஊற்ற முடியாது'

'எண்ணிக்கை பலத்திற்கு ஒப்பவே மதிப்புக்கிடைக்கும்'

'இது ஜனநாயகத்தில் அனுமதிக்கப்பட்ட குறைதான்'

'சிறந்த பாராளுமன்றத்தவர் என்பதைவிடச் சிறந்த கட்சிக்காரர் என்ற பெயரே நிலையானது'

சென்னை--புரசை தி. மு. க. பொதுக்கூட்டத்தில் அண்ணு தெளிவுரை

29-10-57-ல் சென்னை-புரசை (25-வது வட்டம்) தி. மு. க. சார்பில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய அண்ணு அவர்கள், தி. மு. கழகத்தைக் குறை கூறுவோரின் போக்குபற்றியும், இந்த நாட்டு "சட்டசபை ஜனநாயகம்" குறித்தும் விளக்கினர். அதன் விவரம் வருமாறு:—

"சட்டசபையில், 'நாங்கள் சொல்லுவதுதான் நியாயம்' என்று அழுத்தந்திருத்தமாகக் காங்கிரஸ்காரர்கள் சொல்வதற்கு ஒரே ஒரு காரணம், அவர்கள் எண்ணிக்கை 150 என்பதுதான். எதிர்க் கட்சிகளிலுள்ள அத்தனைபேரையும் ஒன்ருகச் சேர்த்துக் கூட்டினுலும் 50 பேருக்குமேல் இல்லை. இந்த ஜனநாயகக் கணக்கை மறுத்துவிடுவதற்கில்லை.

"காங்கிரஸ்காரர்களைத் தனித்தனியாகச் சந்தித்துக் கேட்டால், சில கருத்துக்களை 'ஆம்' என்று ஒப்புக்கொள்வார்கள்; சட்டசபைக்குள் சென்ருல், அவர்கள் கட்சிக் கட்டளைப்படித்தான் நடந்துகொள்வார்கள்.

"ஜனநாயகத்துக்கு ஒரே ஒரு பாஷைதான் தெரியும்; ஆள் எண்ணிக்கைப் பலம்தான் அதற்குத் தேவை; நியாய அநியாயங்களைப் பற்றி அதற்குக் கவலையில்லை. இந்தக் குறை, ஜனநாயகத்தில் அனுமதிக்கப்பட்ட ஒன்ருகும்.

"'கந்தசாமியும் கருப்பு—காகமும் கருப்பு என்ருல், 'கந்தசாமி தான் காகம்'—காகம்தான் கந்தசாமி; இரண்டுபேரும் ஒன்றுதான்' என்று சொல்லி ஓட்டெடுத்தால், 'கந்தசாமி தான் காகம்' என்று 150 பேர்களும் கை தூக்குவார்கள். 'கந்தசாமி காகமல்ல—மனிதன்' என்று ஒரு 15 பேர் சொன்னுல், அதை ஜனநாயகம் ஏற்றுக்கொள்ளாது; சட்டமன்றப் புத்தகத்தில், 'கந்தசாமி காக்காய்' என்று எழுதப்பட்டுவிடும்.

"பொதுமக்களாகிய நீங்கள் எங்களைப் பெருவாரியாகச் சட்டமன்றத்திற்கு அனுப்பியிருந்தால், 'வாதம் தவறு' என்பதை எடுத்துக்காட்ட முடியும்; எனவே, ஜனநாயகத் தத்துவத்தில் எண்ணிக்கைக்குத்தான் மதிப்பு—நியாயத்துக்கல்ல!

"இதற்கு நிவர்த்தி என்னவென்ருல், 5 ஆண்டுக் காலத்தில் மக்கள் உண்மையை அறிந்து நியாயத்துக்குப் பாடுபடுபவர்களைப் பெருவாரியாக சட்டமன்றத்திற்கு அனுப்பிவைப்பது தான்!

"அதனுல்தான், அமைச்சர் சுப்பிரமணியம் நம்மைப் பற்றி என்ன சொன்னுலும் எனக்குக் கோபம் வருவதில்லை; நம்மைவிட அவர்கள் எண்ணிக்கையில் அதிகம்!

"வித்துவான் ஒருவர் பாடும் போது சுருதி தவறினுல், எதிரில் அமர்ந்திருப்பவர், 'சுருதி சரியில்லை' என்று சொன்னுல், 'நான் பெரிய வித்வான்; எனக்குச் சரியாகத்தான்படுகிறது; இந்தச் சபையிலே எனக்குத்தான் மாலை மரியாதையெல்லாம் நடந்தது; அட பயலே! என்னை நீ குறை கூறுகிருயா?' என்று சொல்லமாட்டார்; ஆனுல் சுப்பிரமணியம் கூறுகிருர்! அவர் சுருதி தவறி—தாளம்விட்டு கச்சேரி நடத்துவதை நாட்டு மக்கள் கவனித்துவந்து, 5 வருடம் கழித்துத் தேர்தல் வந்தால், 'அந்தச் சபைக்கு இந்த வித்துவான் தேவையில்லை' என்று கூறிவிடுவார்கள்.

"'தி. மு. கழகத்தவருக்கு சட்ட சபையில் பேசத் தெரியவில்லை' என்று அமைச்சர் சுப்பிரமணியம் சொல்கிருரென்ருல் அது இயற்கைதான்; அந்தஸ்து ஏறும்போது தாழ்நிலையிலிருப்பவர்களைப் பார்த்து அப்படித்தான் சொல்லுவார்கள்.

"மெத்த இளைத்த ஒரு ஏழைப் பெண்—'எலும்புக்கூடு' என்று ஊராரால் கேலி செய்யப்பட்டவள்—திருமணமானபின், சொத்துள்ள கணவன் வீட்டுக்குபோய், பிறகு மெருகுலையாத காரில் தாய்வீட்டுக்குத் திரும்பி வந்தால், அதே பெண்ணைப் பார்த்து ஊரார் என்ன சொல்வார்கள் தெரியுமா?—'பூங்கொடி போலல்லவா இருக்கிருள்? எவ்வளவு

தற்கொலை மனப்பான்மை வளருவதேன்?

சட்டசபையில் கழக உறுப்பினர் கேள்வி

சென்னை, நவ. 1—

சென்னை மாநிலத்தில் 1954-ம் ஆண்டில் மொத்தம் 3,415 பேர் தற்கொலை செய்துகொண்டனர் என்றும், 1955-ல் 3,062 பேர்களும், 1956-ம் ஆண்டில் 2,515 பேர்களும் தற்கொலை செய்துகொண்டனர் என்றும் சட்டசபையில் போலீஸ் அமைச்சர் பக்தவத்சலம் புள்ளிவிவரங்கள் தந்தார்.

"இந்தத் தற்கொலைகளுக்கு பட்டினி, வேலையின்மை, காதல் தோல்வி என்பவற்றில் எவை காரணம் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்"

என்று, நமது கழக உறுப்பினர் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் கேட்டார்.

"வேலையின்மை, வறுமை இதன் காரணமாக 89 பேர்; நோயின் காரணமாக 1,274 பேர்; குடும்பத் தொல்லைகளால் 388 பேர்; காதல் காரணமாக 102 பேர்; அறிவு மாருட்டத்தின் காரணமாக 118 பேர்; இதர காரணங்களால் 544 பேர் தற்கொலை செய்துகொண்டனர்" என்று, அமைச்சர் பதிலளித்தார்.

"குடும்பம் முழுவதுமே தற்கொலை செய்துகொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்"

என்று நமது கழக உறுப்பினர் தோழர் எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் கேட்டார்.

"புள்ளிவிவரங்கள் என்னிடம் இல்லை" என்று அமைச்சர் கூறினர்.

"தற்கொலைகளின் எண்ணிக்கை சமீபகாலத்தில் குறைந்திருந்தபோதிலும், தற்கொலை மனப்பான்மைமட்டும் அதிகரித்துள்ளது என்று சிலர் கருத்தறிவித்துள்ளது அரசாங்கத்திற்குத் தெரியுமா?"

என்று நமது கழக உறுப்பினர் தோழர் க. அன்பழகன் அவர்கள் கேட்டார்.

'உண்மைதான்' என்று அமைச்சரும் ஒப்புக்கொண்டார்.

வடவரின் அரசியல் ஆதிக்கப் போக்கினை நேரடியாகவே எதிர்க்க வேண்டுமாம்

ஆட்சி மொழிப் பிரச்சினையைக் குழப்பிக் கொள்ளக் கூடாதாம்

துர்க்காபாய் அம்மையாரின் ஞானத் தெளிவு!

நாகபுரி, அக். 29—

1970-ம் ஆண்டுக்குள், ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியை அமர்த்திவிட வேண்டுமாம்! மேலும் காலந்தாழ்த்தாமல், தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டால் 1970-க்குள் ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியை மாற்றிக்கொள்வது முடியாமற்போகும் என்பதற்கு எந்தவிதக் காரணமுமே இல்லையாம்!

இவ்வாறு, துர்க்காபாய் தேஷ்முக் அம்மையார், ராஷ்ட்ரபாஷா பிரச்சார சமிதி நாகபுரிக் கிளையின் 11-வது பட்டமளிப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருராம்.

"இந்தி உபயோகிப்பதன் மூலமாக, இந்தியாவின் இதர பாகங்களின் மீது—குறிப்பாகத் தென்னுட்டின்மீது அரசியல் ஆதிக்கம் செலுத்த இந்தி மாநிலங்கள் முயற்சிப்பதாக எழுந்துள்ள அச்சமே, ஆட்சி மொழி பற்றி தகராறு எழுப்பப்படுவதற்குக் காரணமாகும்.

"இதற்குத் தகுந்த பரிகாரம் என்னவெனில், இந்தி பேசும் மாநிலத்தவர், இதரர் மீது அரசியல் ஆதிக்கம் செலுத்த மேற்கொள்ளும் அத்தகைய போக்கினை, நேரடியாகவே சனநாயக வழிகள் மூலம் எதிர்ப்பதுதான்; அதைவிட்டு, இந்திதான் ஆட்சி மொழி என்ற பிரச்சினைமீது மீண்டும் தகராறு கிளப்புவது அல்ல"

என்றும் அந்த அம்மையார் தெரிவித்தாராம்!

மத்திய அரசாங்கம் நஷ்டப்பட்டா தொழில் நடத்துகிறது?

சேலம் மாக்னசைட் பற்றி மந்திரியின் விநோதமான பதில்

சென்னை, நவ. 1—

சேலம் மாவட்டத்தில் கிடைக்கும் மாக்னசைட்டைப் பயன்படுத்துவது பற்றி தொழில் அமைச்சரிடம் இன்று சட்டசபையில் கேள்விகள் கேட்கப்பட்டன.

"மத்திய அரசாங்கமும், 'பர்ன்' நிறுவனமும் கூட்டாக சென்னையில் மாக்னசைட் தொழில் நடத்துவதற்கு உடன்படுவதைவிட, சென்னை அரசாங்கமே ஏன் இந்தத் தொழிலை நடத்த முன்வரக்கூடாது?"

என்று நமது கழக உறுப்பினர் தோழர் எம். பி. சுப்பிரமணியம் கேட்டார்.

"எது இலாபகரமோ அதைத்தான் சென்னை அரசாங்கம் செய்யும்" என்று அமைச்சர் வெங்கட்ராமன் பதிலளித்தாராம்.

மத்திய கஜானுவில் கையாடல்

சென்னை, நவ. 1—

சென்னை மாநில அரசாங்கத்தின் நிதி இலாகாவைச் சேர்ந்த மத்திய ஜகானுவில் ரூ. 1,758 கையாடல் நடைபெற்றது உண்மைதான் என்றும், இதில் பொறுப்புள்ள அதிகாரி வேலையிலிருந்து நீக்கப்பட்டார் என்றும், மேலும் கையாடல் தடுப்புக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்றும் நிதிஅமைச்சர் திரு. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

'கையாடப்பட்ட பணம் திரும்பப் பெறப்பட்டதா?' என்று நமது கழக உறுப்பினர் தோழர் ஏ. கோவிந்தசாமி கேட்டதற்கு, ரூ. 1757·87 திரும்பப் பெறப்பட்டது என்று அமைச்சர் கூறினர்.

★★★★★★★★★★★★★★★★★★

முக்கிய அறிவிப்பு

நாளை (சென்னை 3—11—57 வெளியூர் 4—11—57) 'நம் நாடு' 'தனி இதழ்' ஒன்று வெளிவரும்; இதழில், ஏற்கனவே அறிவித்தபடி, கடந்த 30—10—57 அன்று சட்டசபையில் மந்திரி சபைமீது நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தில் கலந்துகொண்ட அண்ணு அவர்கள் ஆற்றிய உரை, முழுவதுமாக இடம் பெறும்.

சென்னை நகரில் ஞாயிறன்று காலையிலேயே இதழ்கள் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

—ஆசிரியர்

★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி.மு.க. தினஇதழ்

சென்னை 2—11—57 சனி

அக்கறை இல்லையா?

பர்மாவாழ் தமிழ் மக்களுக்கு, பர்மிய அரசினர் இழைக்க முன் வந்துள்ள தொல்லைகளைக் குறித்து முன்னர் குறிப்பிட்டிருந்தோம். பர்மிய அரசினரின் போக்கிற்கு எது காரணம், அப்போக்கு எதில் போய் முற்றுப்பெறும் என்பது சொல்லாமலே விளங்கிக்கொள்ளக் கூடியது.

வெளிநாட்டில் வாழ்ந்துவருகின்ற இந்தியத் துணைக்கண்டத்தின் குடிமக்கள் குறித்து அக்கறையுடன் நடந்துகொள்ள வேண்டிய பொறுப்பும் கடமையும் இந்தியப் பேரரசிற்கு உண்டு. அவ்வகையில் பர்மாவில் வாழ்ந்துவரும்—பொதுவாக இந்தியத் துணைக்கண்டத்து மக்களுடையவும் குறிப்பாகத் திராவிட—தமிழக மக்களுடையவும் குறைகளை ஆராய்ந்தறிந்து, அதற்கேற்ற பரிகாரம் தேட வேண்டியது—அதிலும் அவர்கள் முறையிட்டுக் கொள்ளுவதற்கு முன்னரே தம்மிச்சையாகக் கேட்டு—இந்தியப் பேரரசின் தலையாய கடமையாகும்.

மேற்குறிப்பிட்ட பொறுப்பையும் கடமையையும் திறம்பட ஒழுங்காக காலாகாலத்தில் நிறைவேற்றி வைப்பதற்குத்தான் தூதுவர் என்ற பெயரில், மற்ற நாடுகளின் தலைநகரில் இருந்துவருவதுபோன்றே, பர்மா தலைநகரிலும் ஒரு தூதுவரை இந்தியப் பேரரசு வைத்துக்கொண்டு இருக்கிறது. பர்மாவாழ் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி பற்றிய விவரத்தை, அவர்கள் சார்பில் பர்மா இந்தியர் காங்கிரசு நிறுவனம் இந்தியப் பிரதமரிடம் கூறுவதற்கு முன்னர், அங்குள்ள இந்தியத் தூதுவர், இந்தியப் பேரரசிற்கு உணர்த்துவதின் மூலம் தனது கடமையைச் செய்திருக்க வேண்டும்.

அந்தத் தூதுவர் தனது கடமையை, அதாவது பர்மாவாழ் தமிழ் மக்களுக்கு பர்மிய அரசாங்கத்தால் இழைக்கப்படும் இடுக்கண்களை, இந்தியப் பேரரசிற்கு உணர்த்தியுள்ளதாக இதுவரை தகவல் இல்லை. பர்மா தமிழ் மக்களுக்கு ஆறுதல் தேடித்தரும் முறையில், தூதுவர் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கை குறித்தும் விளக்கம் தரப்படவில்லை.

பர்மாவில் உள்ள இந்தியப் பேரரசின் தூதுவர், அங்குள்ள தமிழ் மக்களுக்கு பர்மா அரசாங்கத்தால் புதிதாக இழைக்கப்படும் இடுக்கண்களை, இந்தியப் பேரரசிற்குக் காலாகாலத்தில் தெளிவாக உணர்த்தாமல் இருக்க நியாயமில்லை. அப்படி அவர் உணர்த்தின உண்மைகளை, இந்தியப் பேரரசு இதுவரை இருட்டடித்து வைத்திருக்கக் காரணம் என்ன? அக்கேடுகளைக் களைய தாம் முயற்சித்ததா இல்லையா என்பதைப் பொதுமக்களுக்குக் கூறாது இந்தியப் பேரசு மூடிவைத்திருப்பதின் நோக்கம் என்ன?—என்கின்ற கேள்விகளைக் கேட்க எவரும் எண்ணுவது நியாயமேயாகும்.

பர்மாவில் மொத்தத்தில் பத்து இலட்சம் இந்தியத் துணைக்கண்ட மக்கள் இருந்து வருகின்றனர். அவர்களில் பெரும்பகுதியினர் தமிழர்களும் ஆந்திரர்களும் ஆவர். அவர்களில் பெரும்பான்மையினர் தினக் கூலிக்கு ஊழியஞ் செய்துவரும் சாதாரண ஊழியர்களாவர். சிறு சிறு தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள் சில ஆயிரம் பேர்களே இருப்பர்.

இவர்களில் பெரும்பாலோர் பர்மிய குடிமக்களுரிமையை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. அதற்கு எது காரணமாக இருக்கக்கூடும் என்ற ஆராய்ச்சிக்குத் தேவையே இல்லை.

இப்பொழுது அவர்களுடைய எதிர்காலம் நெருக்கடியான கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அதற்கான துவக்கப் பணியை பர்மிய அரசாங்கம் இப்பொழுது துணிந்து துவக்கி இருக்கிறது. நிற்க,

பர்மாவிற்கும் இந்தியப் பேரரசிற்கும் சிறந்த நட்புறவு இருந்துவருவதாக நம்பப்படுகிறது. அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் டெல்லி ஆட்சியினரால் அடிக்கடி பிரச்சாரமும் செய்யப்பட்டுவருகிறது.

ஆனால் பர்மா அரசாங்கமோ, தனது நாட்டில் நாணயமாக வாழ்ந்துவரும் இந்தியத் துணைக்கண்டத்து மக்கள்பால், அன்பும் ஆதரவும் காட்டி நடந்துகொள்வதாக இல்லை. அவர்களிடத்தில் வெறுப்புக் காட்டி நடந்து கொள்ளுகிறதோ என அஞ்சும் வகையிலேயே பர்மா அரசாங்கத்தின் செயல் அமைந்துகிடக்கின்றது.

ஏற்கனவே பர்மாவை இந்தியத் துணைக்கண்டத்துடன் முடிந்து வைத்திருந்தது ஆங்கில ஏகாதிபத்தியம். அப்பொருத்தமற்ற முடிப்பை 1935-ம் ஆண்டில்தான், அதே ஏகாதிபத்தியம் துண்டித்து, பர்மாவைத்தனிநாடாக அமைத்தது.

அப்பிரிவினையின் காரணமாக பர்மா கொடுக்க வேண்டியிருந்த கடன் 68 கோடி ரூபாயாகும். அப்பெருந்தொகைக் கடனில் ரூ. 48 கோடியைத் தள்ளிக் கொடுத்து ரூ. 20 கோடியைப் பெற்றுக் கொள்ளுவது என பர்மாவுடன் இந்தியப் பேரரசு, 1954-ல் உடன்பாட்டிற்கு வந்தது.

இந்தியப் பேரரசு காட்டிய தாராளபுத்தியின் காரணமாக, தனது அரிசியைக் குறைந்த விலைக்கு இந்தியாவிற்கு பர்மா விற்க வேண்டும் என்ற நிபந்தனை அந்த உடன்பாட்டில் உண்டு.

ஆனால், பர்மாவோ அவ்வுடன்பாட்டின் நிபந்தனைக்கு மாறாக, அதிக விலைக்கே இந்தியாவிற்கு விற்றுத் தனது அரிசியைப் பணமாக்கிற்று.

1960-ம் ஆண்டுக்குப் பிறகு 12 ஆண்டுகளில் கொஞ்சம் கொஞ்சமாகத் திரும்பப் பெற்றுக் கொள்ளுவது என்ற ஒப்பந்தத்தின்கீழ், குறைந்த வட்டியில் ரூ. 20 கோடியை இந்தியப் பேரரசு பர்மாவிற்குக் கடனாகக்கொடுத்து உதவி இருக்கிறது. இந்தியப்பேரரசிடமிருந்து இத்தகு உதவிகளைப் பெற்றுக் கொண்டுள்ள பர்மாதான், அங்குள்ள தமிழ் மக்கள் உள்ளிட்ட இந்தியத் துணைக்கண்டத்து மக்களுக்குத் துணிந்து தொல்லை தர முனைந்திருக்கின்றது. நிற்க.

தன் நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு, இந்தியப் பேரரசு செய்த உதவியை மறந்து, பர்மா அரசினர் கேடு சூழ முந்துவது வியப்புக்குரியதாகும். அதைவிட வியப்புக்குரியது, பர்மாவில் வாழும் தனது நாட்டு மக்கள் குறித்து இந்தியப் பேரரசு காட்டவேண்டிய அளவு அக்கறை காட்டத்தவறி இருப்பது! இந்தியப் பேரரசின் போக்கைக் கருதும் எவரும், பர்மாவாழ் தமிழ்மக்கள் படும் அவதி குறித்து இந்தியப் பேரரசிற்கு அக்கறை இல்லையா என்றுதான் கேட்கத் தோன்றும்.

மைசூர் மாநிலக் கடற்கரையில் ஒரு கப்பல் தொழிற்சாலை

பல ஆண்டுகளாக நிராகரிக்கப்பட்ட கோரிக்கை ஏற்கப்படுமா?

'கடுமையாக வாதிட்டு வருகிறோம்' என்கிறார் முதலமைச்சர் நிஜலிங்கப்பா

மைசூர் மாநிலத்தில் ஒரு கப்பல் கட்டும் தொழிற்சாலை நிறுவ வேண்டும் என மாநில சர்க்கார் கடுமையாகப் போராடி வருவதாக முதன் மந்திரி நிஜலிங்கப்பா தெரிவித்திருக்கிறார்.

புதிய மைசூரின் ஓராண்டுக் கால நிர்வாகம் பற்றிக் கருத்தறிவிக்கையில் அவர் குறிப்பிட்டதாவது:—

"நமது கடற்கரையில், கப்பல் கட்டும் தொழிற்சாலைக்கான இடவசதிகள் இருக்கின்றன; சாதகமான இதர சூழ்நிலைகளும் உண்டு; இருந்தும், கடந்த காலத்தில் நமது கோரிக்கை புறக்கணிக்கப்பட்டு விட்டது; என்றாலும், நாம் இனியாவது நமது மாநிலத்தில் அந்தத் தொழிற்சாலை அமையும் என நம்புகிறோம்.

"நாற்பது ஆண்டுகளாகக் கஷ்டப்பட்டு, கன்னடியர்கள் அனைவரும் தங்களுக்கென ஒரு மாநிலம் கண்டனர். புதிய மாநிலத்தை எதிர்நோக்கிய பிரசினைகளுள் தலையாயது, பல்வேறு பகுதியினரும், தாங்கள் கன்னடியர் என்ற உணர்வையும், ஒற்றுமையையும் பெறவேண்டியிருந்தது தான். இப்போது, நாம் ஒன்றுபட்டுவிட்டோம்"

—என்று குறிப்பிட்டுள்ள அவர், "மாநில மக்கள் அனைவரும், புதிய மாநிலத்தின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் சர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டும்' எனவும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

சந்தன மரங்கள் கள்ளக் கடத்தல்

தடுக்க சர்க்கார் சட்டம் கொண்டுவரும்

சென்னை, அக். 31—

"சர்க்காருக்குச் சொந்தமான காடுகளிலிருந்து சந்தன மரங்களைத் திருட்டுத்தனமாகக் கடத்திச் செல்லப்படுவதைத் தடுப்பதற்காக, சென்னை சர்க்கார் சட்டம் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

"இப்போதுள்ள பழக்கப்படி, தனிப்பட்ட நபர்கள்கூட தங்களுக்குச் சொந்தமான காடுகளிலிருந்து கிடைக்கும் சந்தனமரங்களை சர்க்காருக்குத்தான், நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள்" என்று, மந்திரி பக்தவத்சலம், சட்டசபைக் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

★

தமிழ் நூல் பரிசுகள்

சென்னை, அக். 31—

தமிழ் வளர்ச்சிக் கழகச் செயலாளர்கள் அறிவிப்பதாவது:—

பரிசுத் திட்டத்திற்கு 1. கணிதம்—வானவியல்; 2. பொறியியல்—தொழில் நுட்பவியல்; 3. மானிடவியல்—சமூகவியல்—கலையியல் — அரசியல் — சட்டம்; 4. பொருளாதாரம் — வாணிகம் ஆகிய பகுதிகளில் கையெழுத்துப் பிரதிகள் அனுப்பலாமென்றும், அவ்வாறு அனுப்புவதற்குக் கடைசித் தேதி நவம்பர் 15 என்றும் முன்பு அறிவிக்கப்பட்டது.

இந்தத் தேதியைத் தள்ளி வைக்கவேண்டுமென்று பலர் எழுதியிருக்கிறார்கள்; அவர்களுடைய விருப்பத்திற்கிணங்கி கையெழுத்துப் பிரதிகள் 1958 ஜனவரி 6-ந் தேதிக்குள் அனுப்பலாமெனத் தீர்மானிக்கப் பெற்றிருக்கிறது. நீட்டிப்பு அனைவருக்கும் வசதியாக இருக்குமென நம்புகிறோம்; அத்தேதிக்குப் பிறகு வரும் கையெழுத்துப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

சந்தன எண்ணெய்த்தொழில்

'திட்டமில்லை' என்கிறார் மந்திரி

கழக உறுப்பினர்கள் கேள்விகட்குப் பதில்

சென்னை, அக். 31—

சந்தனமரத்திலிருந்து எண்ணெய் தயாரிக்கும் தொழில் வளர்ச்சிக்கான திட்டம் எதும் அரசாங்கத்திடம் இல்லை என்றும், சந்தனமரம் ஏலம் விடப்படுகிறது என்றும் அமைச்சர் பக்தவத்சலம், சட்டசபையில் தெரிவித்தார்.

'வெளிநாடுகளுக்கு சந்தனம் ஏற்றுமதி செய்யப்படுவதில்லை; எண்ணெய் மட்டுமே அனுமதிக்கப்படுகிறது' என்று கழக உறுப்பினர் தோழர் க. அன்பழகன் கேட்டதற்குத் தெரிவித்தார்.

'தென் ஆற்காடு கள்ளக்குறிச்சி பகுதியிலுள்ள சந்தனமரங்களைப் பயன்படுத்தித் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் இல்லை' என்று, கழக உறுப்பினர் தோழர் ஏ. கோவிந்தசாமி கேட்டதற்கு அமைச்சர் தெரிவித்தார்.

'வட ஆற்காடு செங்கம் பகுதியில் உள்ள சந்தனமரத்தையும் பயன்படுத்திக்கொள்ளும் திட்டம் இல்லை' என்று கழக உறுப்பினர் தோழர் சந்தானம் கேட்டதற்கு அமைச்சர் தெரிவித்தார்.

அன்னியச் செலாவணி நெருக்கடி

சமாளிக்க டெல்லியின் முயற்சி

குடியரசுத் தலைவர் அவசரச் சட்டம் பிரகடனம் செய்கிறார்

புதுடில்லி, அக். 31—

செலாவணிக் கஷ்டத்தைச் சமாளிக்க என்று கூறி, குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத் ஒரு அவசரச் சட்டம் வெளியிட்டிருக்கிறார்.

இந்திய ரிசர்வ் பாங்கியில் சட்ட பூர்வாக இருக்க வேண்டிய வெளிநாட்டுச் செலாவணி ரிசர்வ்வின் அளவைக் குறைத்துள்ளது அந்த அவசரச் சட்டம்.

இதன்படி கரன்சி ஆதாரத் தொகையின் குறைந்தபட்ச அளவு ரூ. 200 கோடியாகக் குறைக்கப்படுகிறது; இதில் ரூ 115 கோடி தங்கமாகவும், தங்கக் கட்டிகளாகவும் இருக்கும்.

இந்த அவசரச் சட்டத்திற்கு முன்னால், இந்தக் குறைந்தபட்ச அளவு ரூ. 400 கோடியாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இது வெளிநாட்டுக் கடன் பத்திரங்களாக இருக்கும். தங்கமாகவும், தங்கக் கட்டிகளாகவும் ரூ. 115 கோடி இருக்க வேண்டும். எனவே, குடியரசுத் தலைவரின் அவசரச் சட்டம், ரிசர்வ் பாங்கி வைத்துக் கொள்ள வேண்டிய வெளிநாட்டுக் கடன் பத்திர அளவினை ரூ. 200 கோடியிலிருந்து ரூ. 85 கோடியாகக் குறைத்துள்ளது. அத்துடன், செலாவணி நிதியான இருநூறு கோடி ரூபாயையும், வெளிநாட்டுக் கடன்களில் விட்டுவைக்கும் கட்டாயத்தையும் அந்த அவசரச் சட்டம் ரத்து செய்கிறன. தேவையானால், இதனை தங்கக் கட்டிகளாகக் கூட வைத்துக்கொள்ளலாம்.

இந்த அவசரச் சட்டத்தின் மூலம் ரிசர்வ் பாங்கியிலிருக்கும் கரன்சி ஆதார நிதி, மூன்று மாதங்களுக்கு அன்னியச் செலாவணியை ஈடுசெய்யப் போதுமானதாகயிருக்கும்.

'அரசியல் வாழ்விலிருந்து நிரந்தரமாக விலகிக்கொள்கிறேன்'

ஜெயப்பிரகாஷ் நாராயணன் முடிவு

அலகாபாத், அக். 31—

இறுதியாக அரசியலிலிருந்து நிரந்தரமாக விலகிவிட்டதாகவும் எஞ்சியுள்ள வாழ்நாளை சர்வோதய இயக்கத்தில் செலவிட தான் உத்தேசித்திருப்பதாகவும் ஜெயப்பிரகாஷ் நாராயணன் தெரிவித்திருக்கிறார்.

அரசியலிலிருந்து பூராவாக விலகிக்கொள்வது என்ற தனது முடிவை தனது பி. சோ. கட்சித் தோழர்களுக்கு, 'அமிர்தபஜார்' பத்திரிகையில் எழுதியுள்ள கடிதம் மூலம் அவர் தெரிவித்திருக்கிறாராம்.

"வாழ்நாள் முழுவதும் இணைந்து வேலை செய்தவர்களிடமிருந்து விலகிச் செல்வது ஒருவருக்கு மிகக் கஷ்டமானதாகும். நெடிய சிந்தனைக்குப் பிறகு நான் இதனை எழுதுகிறேன்" என்று அவர் மிக உருக்கமாக எழுதியிருக்கிறாராம்.

தொழிற்சங்கங்களில் தி. மு. க. பணி

மாதவரத்தில் மு. கருணநிதி விளக்கம்

15—10—57 மாலை 6-30 மணிக்கு சென்னையடுத்த மூலைக் கடையில், மாதவரம்—கொடுங்கையூர் வட்ட தி. மு. கழகக் கிளைகளின் சார்பில், தோழர் மா. பொ. வேதாசலம் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் மதிவாணன், என். வி. என். சோமு, மு. கிருட்டினமூர்த்தி, டி. வி. நாராயணசாமி ஆகியோர் பேசியபின் தோழர் மு. கருணநிதி எம்.எல்.ஏ. அவர்கள் கழக இலட்சியங்கள் குறித்தும் தொழிற்சங்கப் பணிகள் குறித்தும் விளக்கவுரை ஆற்றினர். அவர் பேசும்போது குறிப்பிட்டதாவது :—

"இன்றைக்கு நமது பாசறையான தி. மு. கழகம் எந்தப் பணியில் ஈடுபட்டாலும் அதைக் கண்டு மாற்றார் பொருமைப்படுகிறார்கள் — பொச்சரிப்புக்கொள்கிறார்கள் என்றால், நாம் வளர்கிறோம்—நமது கழகம் வளர்கிறது என்று பொருள். இதைக்காண முடியாதவர்கள் நம்மைப்பார்த்து இழித்தும்பழித்தும் பேசுவதை விடுத்து வேறு என்ன பேச முடியும் அவர்களால்?

"மாதவரம் பகுதியில் நமது கழகத் தோழர்கள் ஈடுபாடுகொண்டு தொழிற்சங்கம் அமைப்பதைக் குறித்துப் பழித்துப் பேசியும், துண்டறிக்கை அச்சடித்தும் துவேஷப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனராம்; 'குறைந்த எண்ணிக்கையானவர்களை வைத்துக்கொண்டு தொழிற்சங்கம்அமைக்க தி. மு. கழகத்திற்கு என்ன அருகதை உண்டு? அப்படி எற்படுத்தினாலும் இவர்களுக்கு தொழிற்சங்கத்தை நடத்திச் செல்லத் தெரியுமா?' என்று சவால் விடுகின்றனரே அகில உலக மேதாவிகள்—அவர்களுக்கு ஒன்று கூறுவேன்—சென்னையில் ஏற்படுத்தப்பட்டுள்ள சென்னை சர்க்கார் தீவிர பஸ் போக்குவரத்துத் தொழிலாளர் சங்கத்தில் தோழர் கி. மனோகரன் தலைமையில் இயங்கிவருவதில் உள்ள உறுப்பினர்களைவிட, :கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவரின்கீழ் பணியாற்றும் சங்கத்தில் உறுப்பினர் எண்ணிக்கை குறைவு; உறுப்பினர் எண்ணிக்கை குறைவு என்ற காரணத்தை ஒட்டி, அந்தத் தொழிற்சங்கத்தைக் கலைத்துவிடத் தயாரா என்று கேட்கிறேன்!

"அதுபோலவே சிலர், 'போட்டிச் சங்கம் ஒழிக' என்று 'நோட்டீஸ்' அச்சடித்து உள்ளனர். 'இங்கே அமைக்கப்படும் தொழிலாளர்கள் சங்கம்—வேறு எந்தத் தொழிற்சங்கமும் இல்லாத தொழிலகங்களுக்குத்தான் அமைக்க ஏற்பாடு செய்கிறோம்' என்று கழகத் தோழர்கள் கூறினார்கள். இப்படி இருந்தும் 'போட்டி சங்கம் ஒழிக' எனத் துண்டறிக்கை வெளியிட்டுள்ளனர்—'போட்டிச் சங்கம்' என்ற வார்த்தைக்குப் பொருள் தெரியாதவர்கள்!

"திருச்சியில் கடந்த 10 ஆண்டுகளாக நமது கழகத் தோழர்கள் சார்பில் நடைபெற்றுவரும் பீடித் தொழிலாளர் சங்கம, சென்ற மாதம், 'பீடித் தொழிலாளர் மாநாட்டில் மு. கருணாநிதி கலந்துகொள்வார்' என்று அச்சிட்டு வெளியிட்டிருந்தது; அந்த அறிக்கையைக் கண்ட பொதுவுடைமைத் தோழர்கள் மனம் பொருமல் 'பீடித் தொழிலாளர் சங்க அமைப்புக் கூட்டம்—கல்யாணசுந்தரம் கலந்துகொள்வார்' என்று அச்சடித்து நோட்டீசு வெளியிட்டனர்.

"இங்கு, 'போட்டிச் சங்கம் ஒழிக' என்று அச்சடித்து வெளியிட்ட தோழர்களுக்குக் குறிப்பிட ஆசைப்படுகிறேன்—'இங்கு போட்ட துண்டறிக்கையை திருச்சியிலே வெளியிட்டிருக்க வேண்டும்'-என்று! யார்போட்டிச் சங்க அமைப்பாளர்கள் என்பதும் மக்களுக்குத் தெரியவரும்.

"இந்த நாட்டைப் பற்றி— இந்த நாட்டு மக்களைப் பற்றி— இந்த நாட்டு மொழியைப்பற்றி அக்கறையுடன் பணியாற்றி வரும் ஒரே ஒரு இயக்கம்—திராவிட முன்னேற்றக் கழகம்தான்; மற்றையக் கட்சிகளெல்லாம் 'அகில உலக'த்தைப் பற்றியும், 'அகில இந்தியா'வைப் பற்றியும்அக்கறைகொண்டவையாகும்.

"அகில உலகத்தைப்பற்றிப் பேசுகிறவர்களுக்கு ரஷ்யாவைப் பற்றித்தான் கவலை — அங்கேயுள்ள தலைவர்களைக் காட்டித்தான் இயங்க முடியும்; அதுபோலவே 'அகில இந்தியா'வைப் பற்றிப் பேசுகிறவர்களுக்கு டெல்லியைப் பற்றியும், வடநாட்டைப் பற்றியும்தான் கவலை—அங்குள்ள தலைவர்களைக் காட்டித்தான் இங்கே கூறமுடியும். ஆனால் நமது தி. மு. கழகம் நம் நாட்டைப்பற்றியும்—நமது மக்களைப் பற்றியும் அக்கறை கொண்டதாகும்; நீங்களே சிந்தித்துப் பாருங்கள்—இந்த நாட்டுக்காகப் பாடுபடும் இயக்கம் எது என்பதை."

பின்னர் கலைவாணர் என்.எஸ். கே. மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், தென்னகத்தின் மீது மத்திய சர்க்கார் இந்தியைத் திணிக்க முயற்சிப்பதைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கலைவாணர் படத் திறப்பும் நாடகமும்

க. அன்பழகன் எம்.எல்.ஏ., எம். ஜி. இராமச்சந்திரன் கலந்துகொண்டனர்

சென்னை, அக். 30—

சென்னை லளித கலாமன்றத்தின் சார்பில் கடந்த 22-10-57 மாலை, இராஜா அண்ணாமலை மன்றத்தில் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் படத் திறப்பும், இரவு 7 மணிக்கு பிரண்டு இராமசாமி குழுவினரின் 'அன்பின் ஜோதி' நாடகமும் நடைபெற்றன.

படத்திறப்பு விழாவுக்கு சென்னை நகரமன்றத் தலைவர் திரு. கே. என். சீனிவாசன் அவர்கள் தலைமை வகித்தார்.

பேராசிரியர் க. அன்பழகன் எம். எல். ஏ., அவர்கள் கலைவாணர் படத்தைத் திறந்துவைத்து கலைவாணரின் குண நலன்களைப் பாராட்டிப் பேசினர்.

நடிகமணி டி.வி.நாராயணசாமி அவர்களும் கலைவாணரின் அரிய சிறப்பியல்புகளைப் பாராட்டினர்.

லளித கலாமன்றச் செயலாளர் நன்றி கூறினர்.

நாடகத்துக்கு புரட்சி நடிகர் எம்.ஜி. இராமச்சந்திரன் தலைமை தாங்கினர்.

நாடகத்தைப் பாராட்டி திரு. டி. கே. சண்முகம் பேசினர்.

பிரண்டு இராமசாமி நன்றி கூறினர்.

சென்னை-புரசை தி. மு. க. கூட்டம்

அண்ணா, அன்பழகன், மதியழகன் ப. உ. சண்முகம், ஏ. கோவிந்தசாமி

கலந்துகொண்டனர்

சென்னை, அக். 30—

சென்னை-புரசை தி. மு. கழகக் கிளையின் சார்பில் நேற்று மாலை ஆதியப்ப முதலித் தெருவில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அண்ணா அவர்களும், தோழர்கள் க. அன்பழகன் எம். எல். ஏ. கே. ஏ. மதியழகன், ப. உ. சண்முகம் எம். எல். ஏ,; ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., ஆகியோர் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

தோழர் க. வெற்றியழகன் அவர்களைத் தலைமையேற்குமாறு கேட்டுக்கொண்டு தோழர் டி.கே. பொன்னுவேலு சிறிது நேரம் பேசினர்; தோழர் கணேசன் வழிமொழிந்தார்.

தலைமையுரைக்குப்பின் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் காங்கிரஸ் அரசாங்கத்தின் இன்றையபோக்கு குறித்தும், அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களின் முன்னுக்குப்பின் முரணான பேச்சுகள் குறித்தும் பேசினர்.

அடுத்து, தோழர் ப. உ. சண்முகம் அவர்கள், பேசுகையில், சட்டசபை நடவடிக்கைகள் குறித்தும், ஆளும் கட்சியார், சட்டசபையிலே செய்கிற தவறுகளை தி. மு. கழக உறுப்பினர்கள் அவ்வப்போது எடுத்துக் காட்டித் திருத்தி வருவதைக் குறித்தும் விளக்கினர்.

அடுத்து, தோழர் கே. ஏ. மதியழகன், க. அன்பழகன் ஆகியோர் பேசியபின் (பேச்சு பின்னர்வரும்) அண்ணா அவர்கள் பேச எழுந்தார்கள்.

அண்ணா அவர்களுக்கும், மற்றும் பேசாளர்களுக்கும் 25-வது வட்ட தி. மு. க. மாணவர் கிளை சார்பிலும், முத்தமிழ் மன்றச் சார்பிலும் ஆங்கிலப் புத்தகங்கள் அன்பளிப்பாக அளிக்கப்பட்டன.

மற்றும், முத்தமிழ் மன்றம், கெல்லீஸ் இளைஞர் மன்றம், புரசை வியாபாரிகள், சரவண பெருமாள் தெரு மளிகைக் கடைத் தோழர்கள், வில்லிவாக்கம் தி. மு. க. கிளை, கே. வி. கே. சாமி மன்றம், 33-வது வட்ட தி. மு. க. கிளை, அறிவு வளர்ச்சி மற்றம் புரசை வள்ளுவர் மன்றம், மற்றும் தோழர் சேக் அமீதா ஆகியோர் சார்பில் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும், டாணா தெரு வெற்றிலை பாக்கு கடைக்காரர் சார்பில் ஒரு பெரிய மாலையும், 1 கவுளி வெற்றிலையும் ஒரு பை நிறையப் பாக்கும் அளிக்கப்பட்டன. கே. வி. கே. சாமி மன்றச் சார்பில் 1,001 புதுக் காசு வழங்கப்பட்டது.

தோழர் சுந்தரம் அவர்களது குழந்தைக்கு 'இமானுவல்' என அண்ணா அவர்களால் பெயரிட்டப்பட்டது.

பின், அண்ணா அவர்கள் அரியதோர் உரை நிகழ்த்தினார்கள் (பேச்சு விவரம் பின்னர் வரும்). பிறகு நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

புரட்சி நடிகர்

தலைமையில்

வி. ஆர். சந்திரன்-சுசீலா

திருமணம்

எம். ஜி. ஆர். மன்ற ஆர். என். நம்பியார் குழுவைச் சேர்ந்த தோழர் வி. ஆர். சந்திரனுக்கும் திருமதி சுசீலாவுக்கும் 27-10-57 காலை சென்னை இராயப்பேட்டை லாயிட்ஸ்ரோடு சம்ராடி பிரதர்ஸ் இல்லத்தில் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையில் மிகச் சிறப்புறத் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் எம். ஜி. சக்ரபாணி, ஆர். எஸ். பாண்டியன், என். எஸ். நாராயணன், ஆர். எம். வீரப்பன், என். எம். முத்துக்கூத்தன், கே. பி. தாயமணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 10 நன்கொடையளிக்கப்பட்டது.

சென்னை-கோடம்பாக்கம் தோழமைக் கழகத் துவக்க விழா

ஊர்வலமும் பொதுக்கூட்டமும்

அண்ணா, என். வி. நடராசன், அருணகிரிநாதர் கலந்துகொண்டனர்

சென்னை, அக். 31—

சென்னை—கோடம்பாக்கம், சூளைமேடு வன்னியர் தெருவில், ஏற்படுத்தப்பட்டுள்ள தோழமைக் கழகத்தின் துவக்க விழா நேற்று மாலை நடைபெற்றது.

சுவாமி அருணகிரிநாத அடிகள் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் கழகக் கட்டிடத்தைத் திறந்துவைத்தார்.

அண்ணா அவர்களும், மற்றும் ஏ. எஸ். ஜேசுபாதம், முகில் வண்ணன், எஸ். வி. கே. முத்து ஆகியோரும் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

விழாவையொட்டி, மாலை 5-30 மணிக்கு நுங்கம்பாக்கம் இரயில் நிலையத்திலிருந்து ஓர் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, இயக்க ஒலி முழக்கம் செய்துகொண்டு, சூளைமேடு பகுதியில் முக்கிய தெருக்கள் வழியே சென்று பொதுக் கூட்டம் நடக்குமிடத்தையடைந்தது.

ஊர்வலத்தின் முன்னே ஒரு தோழர் பெரிய கழகக் கொடியொன்றை கரத்திலேந்தி குதிரை மீது அமர்ந்து செல்ல, பாண்டு வாத்தியம் முழங்க—பொய்க்கால் குதிரையாடிச் செல்ல, அதன்பின் கழகக் கொடிகளேந்திய தோழர்கள் அணிவகுத்துச் செல்ல, அவர்கள் பின்னாலே துணைப் பொதுசெயலாளர் என். வி. நடராசன் அவர்களும் ஏ. எஸ். ஜேசுபாதம் அவர்களும் குதிரை பூட்டிய சாரட்டில் அமர்ந்து சென்ற காட்சி அனைவர் மனதையும் கவர்ந்தது.

தோழர்கள் பக்தன், மு. சு இராமச்சந்திரன், நவநீதகிருஷ்ணன், எம். என். வேலுசாமி ஆகியோரின் இசைக்குப்பின் பொதுக் கூட்டம் துவங்கியது.

சுவாமி அருணகிரிநாத அடிகளார் தலைமை வகித்து அரியவுரை நிகழ்த்தினர்.

தோழர் முகில்வண்ணன், அடிகளாரைக் கூட்டத்தினருக்கு அறிமுகப்படுத்தி, அவரது அரிய தொண்டினைப் பாராட்டி வரவேற்று தோழமைக் கழகத்தின் செயல்முறைகளை எடுத்துக்கூறி, அனைவரும் தோழமைக் கழகத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

அடுத்து, எம். ஜி. ஆர். நாடக மன்றத்தைச் சேர்ந்த தோழர் எஸ். வி. கே. முத்து பேசுகையில், தோழமைக் கழகத்தினர், தி. மு. கழகம் நடத்தவிருக்கும் இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டு எல்லா வகையிலும் தியாகங்கள் புரியத் தயாராக உள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொண்டு பேசினர்.

பின்னர் தோழர் ஏ. எஸ் ஜேசுபாதம் அவர்கள் பேசுகையில், தேர்தலுக்குப்பின் தி மு. கழகம் அடைந்துவரும் வளர்ச்சி குறித்தும், இத்தகைய சார்புக் கழகங்கள் எண்ணற்றவகையில் நாட்டில் தோன்றிவருவது குறித்தும், முதுகுளத்தூர் கலவரம் பற்றி தி. மு. கழகம் கொண்டுள்ள கருத்தினைத் தெரிவித்தும் பேசினர்.

அடுத்து துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பேசினர், (பேச்சு பின்னர் வரும்.)

இறுதியாக அண்ணா அவர்கள் பேச எழுந்ததும், அவருக்கு 35-வது வட்ட தி. மு. க. கிளை, அண்ணா அறிவு வளர்ச்சி மன்றம், தோழமைக் கழகம், விருகம்பாக்கம் தோழமைக் கழகம், திருபெரும்புதூர் தி. மு. க. கிளை, திருவேங்கடபுரம் தோழர்கள், ஏ. வி. எம். ஸ்டுடியோ ஊழியர்கள், சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர்கள், வரதராசபேட்டை அறிவியக்கப் படிப்பகம், சூளைமேடு குறள்நெறி மன்றம், சூளைமேடு அண்ணா அறிவு மன்றம், 36-வது வட்ட தி. மு. க. கிளை, வாகினி ஸ்டுடியோ தொழிலாளர்கள், வாகினி ஸ்டுடியோவைச் சேர்ந்த பிரசாத்பிராசஸ் ஊழியர்கள், வரதராசபேட்டை தி. மு.க. ஆதரவாளர்கள், பழைய மாம்பலம் தமிழியக்க மன்றம், புலியூர் முத்தமிழ் நூல் நிலையம், தோழர் முத்து, மற்றும் சில தி. மு. க. ஆதரவாளர்கள் சார்பில் கைத்தறி ஆடைகளும் மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

தாய்மார்கள் உட்பட ஏராளமான மக்கள் கூடியிருந்து அண்ணா அவர்களின் பேச்சைக் கேட்டனர்.

அண்ணா உரைக்குப்பின் நன்றி கூறலுடன் கூட்டம் முடிந்தது. (அண்ணா பேச்சு பின்னர் வரும்.)

கூட்டத்தில் அண்ணா அவர்களால் தோழர் துரைசாமியின் பெண் மகவுக்கு 'செந்தாமரை' என்றும், தோழர் பாலகிருஷ்ணனின் பெண் மகவுக்கு 'தமிழ்ச் செல்வி' என்றும் பெயரிடப்பட்டது.

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

தலைமையில்

'கட்டபொம்மன்' நாடகம்

'கலா நிகேதன்' சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிவாஜி நாடக மன்றத்தாரின் 'வீரபாண்டிய கட்டபொம்மன்' நாடகம் 17—10—57 மாலை 6-30 மணிக்கு சென்னை அண்ணாமலை மன்றத்தில் தி மு. க. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பொதுச்செயலாளர் அவர்கள், தமது தலைமையுரையில் சிவாஜி நாடக மன்றத்தாரின்-குறிப்பாக சிவாஜி கணேசன் அவர்களின் நடிப்புத் திறமையையும், கதை-வசன அமைப்பாளர் சக்தி கிருஷ்ண சாமி அவர்களையும், காட்சி அமைப்புகளையும் பாராட்டி அரிய கருத்துரையளித்தார் (விவரம் பின்னர் வரும்).

சிவாஜி கணேசன் அவர்களும், கலா நிகேதன் செயலாளர் அவர்களும், பொதுச்செயலாளர் அவர்கள் நாடகத்துக்கு வருகைதந்து தலைமையேற்றமை குறித்து மகிழ்ச்சி தெரிவித்து, மாலையணிவித்து வரவேற்றும் நன்றி கூறியும் பேசினர்.

சேலம் நகர யூனியன் 'கிளப்'பில் சூதாட்டம்

சூதாடியதாக தொடரப்பட்ட வழக்கில் சேலம் நகர யூனியன் கிளப் செயலாளர் வார்ணவாசி உட்பட 24 பேர்களுக்குத் தலா ரூ. 25 அபராதம் விதித்து சேலம் நகர சப்-மாஜிஸ்திரேட் தீர்ப்பளித்தார்.

சூதாட்டம் ஆட சங்கக் கட்டிடத்தைக் கொடுத்ததற்காக வார்ணவாசி என்பவருக்கு மேலும் ரூ. 50 அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த அபராதத் தொகையில் பாதியை(ரூ. 325)யும், ரெய்டின்போது அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட தொகையிலிருந்து ரூ. 700-யும் போலீசாருக்கு சன்மானமாகக் கொடுக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். மொத்தம் ரூ. 1,025 வழக்கு பிடித்த போலீசாருக்கு வெகுமதியாகக் கிடைக்கும்.

ஒரு படி பாத்திரத்தில் இரண்டு படி தண்ணீர்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஒல்லியாக இருந்தாலும் அதிலே எத்தனை அழகு?'—என்று புகழ்வார்கள். 'உள்ளபடியே அந்தப் பெண்ணுக்கு புதிதாக அழகு வந்துவிடவில்லை; அந்தஸ்துக்குத் தக்க புகழ் கிடைக்கிறது; அவ்வளவுதான்!

"அதைப்போலத்தான், ஜனநாயகத்தில் அந்தஸ்துக்குத் தக்க புகழுரை கிடைப்பது வழக்கம். நம்மை ஆளும் கட்சிக்காரர்கள் குறை கூறினால், கேட்டுக்கொள்ளத்தான் வேண்டும். எங்களில் பதினைந்து பேருக்குப்பதில் 50 பேராக சட்டசபைக்கு நீங்கள் அனுப்பி வைத்திருந்தீர்களானால், சுப்பிரமணியம் இப்படிப் பேசியிருக்கமாட்டார்; நீங்கள் ஏற்படுத்திக் கொடுத்த வாய்ப்பினால்தான் அவர் இப்படிப் பேசுகிறார்.

"ஒருபடி பாத்திரத்தில் இரண்டுபடி பால் ஊற்ற முடி முடியாது; ஆனால், எங்களுக்கு நீங்கள் ஏற்படுத்திக் கொடுத்த வாய்ப்பின் அளவையும் மீறி நாங்கள் எங்களாலான காரியங்களை நிறைவேற்ற முயற்சி செய்து வருகிறோம்.

"'சட்டசபை முறைப்படி எங்களுக்குப் பேசத் தெரியவில்லை' என்கிறார்கள்; அவர்களிலேயே பலர் — அமைச்சர்களிலேகூட சிலர் — முறைப்படிப் பேசத் தெரிந்தவர்கள் இருக்க முடியாது.

"இப்பொழுது மின்சார இலாகா அமைச்சராக இருக்கும் இராமையா, நான் முதல் முதல் அண்ணமலைப் பல்கலைக் கழகத்துக்குச் சென்றபோது, அங்கு மாணவர் கழகச் செயலாளராக இருந்தவர்; அப்பொழுது அவர், நான் அண்ணமலைப் பல்கலைக் கழகத்துக்கு வரக்கூடாது என்று பிடிவாதமாக முயற்சி செய்தார்; இருந்தாலும், என்னை அம்மாணவர் கழகத்தார் வரவழைத்துவிட்டனர். ஆனால் நான் பேசிய அந்தக் கூட்டத்துக்கு, 'இந்தப் பாவியின் பேச்சைக் கேட்கக் கூடாது' என்று கருதி திரு. இராமையா வராமலிருந்துவிட்டார்! அவர் மாணவர் கழகச் செயலாளராக இருந்தாரே தவிர, மாணவர் கூட்டத்தில்கூட அவர் பேசியதுமில்லை; ஆனால் அவர், இன்று மந்திரியாகிவிட்டார்; எப்படி ஆனார்? பேசத் தெரிந்ததாலா?

"ஒருவரை அமைச்சராக்குமுன், காமராசர் அவரை அழைத்து, 'உங்களை அமைச்சராக்கப் போகிறேன்' என்றால், உடனே, 'தங்கள் சித்தம்—என் பாக்கியம்' என்று கூறிப் பதவியேற்றுக் கொள்கிறார்கள். 'நீர் அமைச்சராக ஆனால், சபையிலே பல சிக்கலான கேள்விகளெல்லாம் கேட்பார்கள்; அவற்றிற்கெல்லாம் பதில் அளித்தாக வேண்டும்; அதற்கான பேச்சுத் திறனும் வேண்டும்' என்று காமராசர் கூறுவாரேயானால், 'எனக்குப் பேச்சுத் திறமை இல்லையே' என்று பதிலுரைப்பவர்களுக்கு, 'அமைச்சர் பதவியும் இல்லை' என்றல்லவா கூறிவிடவேண்டும்?

"அனுபவம் பெற்றவர்களுக்குத்தான் ஜனநாயகத்தில் இடம் என்பது இல்லை; இடம் கிடைப்பவர்கள் அனுபவம் பெறுவார்கள்.

"ஆசையினால், தி. மு. கழகத்துக்குத் தரப்பட்டிருக்கிற அந்தஸ்து இதுதான் என்பதறிந்து அமைச்சர்கள் தாறுமாறாகப் பேசினார்களானால் நான் திருவண்ணமலை மாநாட்டில் கூறியதுபோல்—'புராணத்தில் சொல்லப்படும் சதையில், பரமசிவன் ஜடாபாரத்திலிருக்கும் பாம்பு, கருடனை நோக்கி, 'என்ன கருடா, சுகமா?' என்று கேட்டதற்கு, 'எல்லாம் இருக்கிற இடத்தில் இருந்தால் சுகம்தான்' என்று கருடன் சொல்லிற்றுமே, அதைத்தான் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

"150 பேராக அவர்கள் இருந்தால், அப்படித்தான் பேசுவார்கள். இதில் புத்திசாலித்தனமும் பாராளுமன்ற முறையும் என்ன தேவையிருக்கிறது? கும்பலில் 'பத்தோடு பதினொன்று—அத்தோடு இது ஒன்று' என்றுதான் பலர் இருக்கிறார்களே தவிர—அத்திபூத்ததுபோல் சில அனுபவமுள்ளவர்கள் இருக்கலாமே தவிர 'அவர்கள் அத்தனைப் பேரும் அனுபவம் முதிர்ந்தவர்கள்—நாங்கள் 15 பேரும் எதுவுமே தெரியாதவர்கள்' என்று பொருளல்ல!

"இந்த ஜனநாயகத்தை அவர்கள்தான் வளர்த்தார்கள்; நாம் அதை இரவல் பெற்றிருக்கிறோம்.

"தேர்தல் முடிந்து சட்டசபை கூட இருந்த நேரத்தில் சட்டமன்றத்தில் எப்படி எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று தோழர் சம்பத்தும், மற்றும் நமது சட்டமன்றத் தோழர்களும் என்னிடம் வந்து கேட்ட நேரத்தில் இதுதான் நான் கூறியது:—

"சிறந்த Parliamentarian (பாராளுமன்ற முறை தெரிந்தவர்) என்பதைவிடச் சிறந்த Party-man (கட்சிக்காரன்) என்பதுதான் நீண்ட நாளைக்கு நிலைத்து நிற்கக் கூடியதும், பயனுள்ளதுமாகும்; இப்போது நமக்குத் தேவை, சிறந்த Party-man-தான். எனவே, அந்த முறையில் பணியாற்றுங்கள்" என்றேன்.

"சிறந்த Parliamentarian-கள் இந்த நாட்டில் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள்; ஆனால், சிறந்த Party-man-கள் மிகச் சிலர்தான் இருக்கிறார்கள். சர் ஆற்காட்டு இராமசாமி ஒரு சிறந்த Parliamentarian — ஆனால், Party-man அல்ல!

"ஐதராபாத் பிரச்சினை வந்தபோது அவரைத்தான் ஐ. நா. சபைக்கு அனுப்பிவைத்தார்கள்; அவர் அங்கு பேசிய பேச்சைக்கண்டு அனைவரும் ஆச்சரியத்தில் வாய்பிளந்தார்கள்; ஐதராபாத்தை வாங்கித்தந்த அவர், இந்திய அரசாங்கத்துக்குப் பயன்பட்ட அளவு நமக்குப் பயன்படவில்லை. அவர் நம்மைப்போல கட்சிக்காரர் அல்ல.

"இன்று தங்கள் கட்சிக்கொள்கைகளை விட்டுவிட்டுக் காங்கிரஸ்காரர்கள் பேசி விடவில்லை; எதிலும் கட்சியைத்தான் கவனிக்கிறார்கள். கட்சிக் கட்டுப்பாட்டை விட்டுவிட்டு அவர்கள் எதையும் பேசவில்லை; அதே நேரத்தில், நம்முடைய கொள்கைகளை விட்டுவிடச் சொல்கிறார்கள்.

"ஒரு வாலிபனை இரண்டு பெண்கள் காதலித்தார்கள்; அவர்களில் ஒரு பெண் ஏழை; ஆனால் அழகுள்ளவள். மற்றொருவள் பணக்காரி; இருவரில் யாரை மணந்துகொள்வது என்று அந்த வாலிபன் தன் நண்பனிடம் யோசனை கேட்டான்; அதற்கு அந்த நண்பன், 'ஏழையாக இருந்தாலும் பரவாயில்லை; அந்தப் பெண்ணையே மணந்துகொள்; அவள்தான் வாழ்க்கையில் உனக்கு எப்பொழுதும் உறுதுணையாக இருப்பாள்; மேலும் அவளே அழகாகவும் இருப்பதாகச் சொல்லுகிறாய்; எனவே, அந்த ஏழைப் பெண்தான் உனக்கேற்றவள்' எனக் கூறிவிட்டு, 'அந்தப் பணக்காரப் பெண்ணின் முகவரியை என்னிடம் கொடு' என்றானாம்!

"அதைப்போலத்தான், சுப்பிரமணியமும், என்னை, பாராளுமன்ற முறை தெரியவில்லை என்று கூறித் தூரத்திவிட்டு, தன் கட்சியை வளர்த்துக்கொள்ளப் பார்க்கிறார்.

"அண்ணாதுரை மேதாவியல்ல; ஆனால் ஏமாளியாகிவிடமாட்டான். எங்கள் கட்சிக் கருத்துக்களை எடுத்துச்சொல்லப் பல இடங்கள் இருக்கின்றன. அவற்றில் சட்ட மன்றமும் ஒன்று என்றுதான் நாங்கள் கருதுகிறோம். பொதுவாக சட்டசபையில் நம் திறமையைக் காட்டவும் வாய்ப்பில்லை; அது, நம் சுபாவத்துக்கும் ஒத்துவராது என்பது எனக்குத் தெரியும்.

"மக்கள் மன்றத்திலே எங்களை 'பேசு, பேசு' என்று வற்புறுத்துவார்கள்; நாங்கள், 'தொண்டை சரியில்லை; நீண்ட நேரம் பேச இயலாது' என்றெல்லாம் சொல்வோம். இப்படி வளர்ந்தவர்கள் நாங்கள். ஆனால் சட்டசபையில் அப்படியல்ல; அங்கு பேசுவதற்கு நாம் கேட்டு, அவர்கள் இடம்கொடுக்க வேண்டும். ஆரம்பத்தில் இது குறித்து நான்கூட கொஞ்சம் வெட்கப்பட்டேன். 'படுமனமே படு' உனக்கு இது சரியான தண்டனை' என்று நானே என் மனதுக்குச் சொல்லிக்கொண்டேன்.

"அப்படிப் பேச வாய்ப்பிருந்து, அவர்கள் கொடுக்கும் நேரத்துக்குள் பேசி முடித்தாலும், அதற்குப் பிறகு, கடைசியாகப் பதிலளிக்கும் உரிமையும் அமைச்சருக்குத்தான் உண்டு. அமைச்சர் நம் பேச்சைத் திரித்துப் பேசினாலும் நாங்கள் குறுக்கிட முடியாது; ஆகையினாலேதான், ஜடாபாரத்திலுள்ள பாம்புக்கு அவர்களை ஒப்பிட்டேன். சாதாரணமாக எல்லாப் பாம்பையும்போல தரையிலே உலவினாலல்லவா அந்தப் பாம்பின் பலம் என்ன என்பது தெரியும்?

"நாம் கால்மணி, அரைமணி என்று ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குள் பேசி முடிக்க வேண்டும்; அப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போதே காங்கிரஸ்காரர்கள் குறுக்கிட்டு ஏதேனும் கேள்வியைக் கேட்டு நம் பேச்சை வேறுபக்கம் திருப்பிவிட்டு விட்டால், பிறகு நாம் சொல்ல இருந்த கருத்தைச் சொல்லமுடியாமற் போய்விடும்; அதற்குள் மணியடித்து விடுவார்கள்; பேசாமல் அமர்ந்துவிட வேண்டியதுதான். இத்தகைய நேரங்களில் எனக்கு ஏற்கெனவேயுள்ள பொறுமை — சுபாவம்தான் நல்ல உதவியாக இருந்து வருகிறது. நல்ல பாதையில் செல்லுபவர்களைக் காலைத்தட்டி விடுவதுபோல, நம் பேச்சை வேறு பக்கம் திருப்பிவிடுபவர்கள் சட்ட சபையில் இருக்கிறார்கள்!

"இவ்வளவு நெருக்கடியில் நாம் பேசினால், அதற்குப் பதிலளிக்க மந்திரிகளுக்குள்ள நேரமோ மணிக்கணக்கில் தேவையான அளவு கொடுக்கப்படுகிறது இதுதான் ஜனநாயகத்தில் உள்ள நிலைமை!

"பெரியார் ஏன் சட்டசபைக்குப் போகிறவர்களைப் பார்த்துக் கோபப்படுகிறார் என்பது இப்பொழுதுதான் புரிகிறது. சாதாரணமாக அவர் 5 மணி நேரம் பேசிப் பழக்கப்பட்டவர்; அவராலே வளர்க்கப்பட்டவர்களாகிய நாங்களும் அப்படியே பேசிப் பழகியவர்கள்; அதனாலேதான் அவர் எங்களிடம் அனுதாபப்பட்டிருக்கிறார்.

"வெட்ட வெளியிலே நின்று 3 மணி நேரம் பேசினாலும் அது வெளி உலகுக்கு எட்டாது; ஆனால், சட்டசபையிலே 3 நிமிடம் பேசினாலும் அது டெல்லிக்கு எட்டும்—பத்திரிகையிலே போடுவார்கள்; சர்க்கார், அச்சடித்துப் புத்தகம் வெளியிடுவார்கள்; உலக சட்டமன்றங்களுக்கெல்லாம் அது பரவ வாய்ப்பு ஏற்படும். ஆனால் இதற்குப் பேசுத் திறமை தேவையில்லை. இருந்தாலும், 'நல்ல பேச்சாளர்கள்' என்று நாட்டு மக்களாலும், 'பொல்லாத வாயாடிகள்' என்று, நாம் புகழ் பெறுவதை விரும்பாதவர்களாலும் பேசப்படும் நாம், தி. மு. கழகக் கருத்துக்கு எந்தவிதக் குந்தகமும் வாராமல் எல்லாவித முயற்சிகளும் செய்து நாட்டுக்குப் பாடுபடுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

விவசாயிகள் தரவேண்டிய கடன்

தவணையை நீடிக்கமாட்டார்களாம்!

சென்னை, நவ. 1—

"செங்கற்பட்டு மாவட்டத்தில் சில பகுதிகளில் பருவ மழை இல்லை; உழவர்கள் ஏமாற்ற மடைந்து இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர்; எனவே, அவர்கள் தரவேண்டிய கடன் தொகைகளை 1958 மார்ச் திங்கள் வரை தள்ளி வைக்கவேண்டும்"

என்று, சென்னை சட்டமன்றத்தில் கோரப்பட்டது.

அந்த மாவட்டத்தில் பருவ மழை போதுமானதாக இருந்தது என்றும், உழவர்கள் தவணைகளில் செலுத்தவேண்டிய கடன் தொகைகளைக் கட்டியிருந்தால் இடையூறு நேர நியாயமில்லை என்றும், எனவே, கடன் தொகைகளை வசூலிப்பதைத் தள்ளிப் போடும் நோக்கம் இல்லை என்றும் அமைச்சர் மாணிக்கவேலர் பதில் தெரிவித்திருக்கிறார்.

அமைச்சர் வெங்கட்ராமனின்

அரசியல் சட்ட ஞானம்

சட்டமன்றத் தலைவர் தீர்ப்பு

சென்னை, நவ. 1—

மோட்டார் வண்டிகள் திருத்தச் சட்டம் மாநில மேல்சபையில் நிறைவேற்றப்பட்டபடி, சட்டமன்றத்தின் அனுமதிக்காக இன்று அமைச்சர் இராமய்யா அவர்களால் கொண்டுவரப்பட்டது.

போக்குவரத்து நிர்வாகப் பொறுப்பை, சட்டமறிந்த தனி அதிகாரிகளிடம் ஒப்படைக்க இந்தச் சட்டம் அனுமதிக்கிறது.

இந்தச் சட்டத்தை ஆராய பொறுக்குக்குழுவிற்கு விடவேண்டும் என்று கொண்டுவரப்பட்ட தீர்மானமும், வேறு இரண்டு திருத்தங்களும் நிராகரிக்கப்பட்டன.

விவாதத்தில் நமது கழக உறுப்பினர்களான தோழர்கள் ப. உ. சண்முகம், ஏ. கோவிந்தசாமி, க. அன்பழகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

போக்குவரத்து மாவட்ட அதிகாரிக்கு உதவியாக ஒரு துணை நீதிபதியை நியமிக்க வேண்டும் என்று கோரும் திருத்தம் அரசியல் சட்டத்திற்கு விரோதமானது' என்று அமைச்சர் வெங்கட்ராமன் ஒரு ஒழுங்குப் பிரச்சினை கொண்டுவந்து, திருத்தத்தைத் திரும்பப்பெறவேண்டும் என்று வற்புறுத்தினர்.

'அமைச்சர் கூறுவது சரியில்லை' என்று, மன்றத் தலைவர் தீர்ப்பளித்தார்.

நோக்கம் இல்லையாம்!

சென்னை, நவ. 1—

மாநில சட்ட அமைச்சர்கள் புதடெல்லியில் கூடி சில முடிவுகளைச் செய்து எல்லா மாநிலங்களுக்கும் அறிவித்துள்ளனர் என்றும், அந்த முடிவுகளை சென்னை அரசாங்கம் ஆராய்ந்து அவற்றை அமுல் நடத்த இன்னும் முற்படவில்லை என்றும் சட்டமன்றத்தில் அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

சாதி இந்துக்களுக்கும்—தாழ்த்தப்பட்டவர்களுக்கும் ஏற்படும் வழக்குகளில், தாழ்த்தப்பட்டவர்களுக்கு இப்போது மாவட்ட 'கலெக்டர்'கள் இலவசமாக சட்ட உதவி அளிக்க அவர்களுக்கு அதிகாரம் தரப்பட்டுள்ளது என்றும், ஏழைகளுக்கு இப்போது இலவச சட்ட உதவி அளிக்கும் திட்டம் இல்லை என்றும் அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்தார்.

சென்னை—16-வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கட்கு:

3—11—57 காலை 9 மணிக்கு சென்னை 16-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும்.

கழகக் கூட்டம்

★

தேவகோட்டை:

நேத்தாஜி சதுக்கத்தில்
4—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: இராசு. முத்துராமலிங்கம்
பேசுவோர்:
தாமரைச்செல்வன்
ப. சிவப்பிரகாசம்
அ. சித்தையன்
இரவு 10 மணிக்கு திருச்சி வாசுகி கலா மன்றத்தாரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

சிதம்பரம் வட்டத்தில்

கருணாநிதி, மதியழகன் தில்லை-வில்லாளன்

சுற்றுப்பயணம்

3—11—57:
மாலை 4 மணி: குமராட்சி
மாலை 6 ,, : காட்டுமன்னார்குடி
2—11—57:
மாலை 3 மணி: வல்லம்படுகை
மாலை 5 மணி: அண்ணமலைநகர் தி. மு. க. மாணவர் கிளை பொதுக் பொதுக்கூட்டம்
இரவு 8 மணி: ஆதிவராகநத்தம் (பெருமாத்தூர்)

இச்சுற்றுப்பயண நிகழ்ச்சிகளில் வழக்கறிஞர் வி. வி. சாமிநாதன், இரத்தின பாலகுருசாமி, பொன் சொக்கலிங்கம், இரா. சக்கரவர்த்தி, கு. அரங்கநாதன், கணபதி இராமசுப்பையா, கோபால கிருட்டினன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

3—11—57 காலை 10 மணிக்கு சென்னை 42-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் தோழர் மு. வரதராசன் தலைமையில் 'உரிமைக் குரல்' என்னும் தலைப்பில் தோழர்கள் கி. கண்ணன், க. சண்முகம், எல். கோபால், ஏ. கே. இளஞ்செழியன், நீல நாராயணன் ஆகியோர் பேசுவர்.

இராமலிங்க அடிகள் பிறந்த நாள் விழா

3—11—57 மாலை 5 மணிக்கு கோடம்பாக்கம் வடபழனி பஸ் நிலையம் அருகில் தமிழ்நாடு இராமலிங்கா மிஷன் சார்பில் இராமலிங்க அடிகள் 133-வது பிறந்த நாள் விழா தோழர் ஏ. கே. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். பாலூர் கண்ணப்பர், திரு. முருகவேள், வே. புகழேந்தி, புலவர் கோவிந்தனார் ஆகியோர் பேசுவர்.

பெங்களூர் பிளாக்பள்ளி தி. மு. க. செயற்குழுவினருக்கு:

3—11—57 காலை 10 மணியளவில் சிவாஜி நகர் தி.மு.க. செயற்குழுக் கூட்டம் 121, சிக்பஜார் ரோடு புதிய அலுவலகத்தில் நடைபெறும். பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

சென்னை—40-வது வட்ட் சாமி படிப்பக பொது உறுப்பினர்கட்கு:

3—11—57 மாலை 6 மணிக்கு சென்னை 40-வது வட்டம் லாக் நகர் சாமி படிப்பக பொது உறுப்பினர் கூட்டம் பணிமனையில் நடைபெறும். பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

'இடிந்த கோட்டை' நாடகம்

3—11—57 இரவு 10 மணிக்கு குடந்தை இராசகோபால் தியேட்டரில் தோழர் கண்ணதாசன் தலைமையில் சூரிய நாடக மன்றத்தாரால் அண்ணா எழுதிய 'இடிந்த கோட்டை' என்னும் நாடகம் நடிக்கப்பெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.